[31st October 1958

Sri K. VINAYAKAM : Sir, is the Hon. Minister aware of the fact that the Dean of the College in the early stages refused to entertain any applications to the M.B.B.S. Course from the Intermediate candidates and later on without publication in the newspapers and without giving any notice to the students, some applications were received in an indirect way?

The Hon. Sri M. A. MANICKAVELU : No ' indirect ' way; everything was direct way only. The thing happened this way, that is, under the Pre-Professional Course, direct admission to M.B.B.S. course was stopped; but there arose ten vacancies for regular admission of which five seats had to be earmarked for Mysore State and so the remaining seats were filled up in this manner after examining the 398 applications received.

Mr. SPEAKER : It is now 10 o'clock. I shall take up three more minutes and finish the rest of the questions.

Employment Exchange

* 760-F *Q*.—Sri V. K. KOTHANDARAMAN : கனம் உள் விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) எம்ப்ளாய்மெண்டு எக்ஸ்சேஞ் போர்டில் வேலையில்லாதவர்களின் பெயரை பதிவு செய்து, பிறகு 3 மாதத்திற்கு ஒரு முறை மறுபடியும் பதிவு செய்யும்படியான விதி எதற்காக உள்ளது ?

(ஆ) ஒரு வேலைக்கு ஆள் வேண்டுமென்றால் எதற்காக 10 பேர்களை அனுப்புகிறார்கள் ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : (*a*) Registration is required to be renewed once in two months. This process enables the Employment offices to keep up-to-date the registers of only such applicants who really need employment assistance through employment offices.

(*b*) Employment Exchanges are not competent to make final selection of candidates for appointment. A batch of applicants generally ranging from 3 to 7 times the number of vacancies is therefore sent to the appointing authorities in order that they may have a wide scope for selecting the most suitable candidate among those sent to them.

Sri V. K. KOTHANDARAMAN : ஒரு முறை பதிவு செய்துகொண்டு விட்டாலும் அப்புறம் இரண்டு இரண்டு மாதங்களுக்கு ஒரு முறை சென்று அதைப் புதுப்பித்துக்கொள்ள வேண்டும் என்கிற முறை இருப்பதனால் அநேகம் பேர் பாதிக்கப்படுகிறார்கள். ஆகவே முதன் முறையாகச் சென்று பதிவு செய்துகொண்டு விட்டாலே போதும் என்று வைத்துக்கொள்ள ஏற்பாடு செய்யப்படுமா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : வேலை வேண்டும் என்கிறவர்கள் இரண்டு மாதத்திற்கு ஒரு முறை சென்று புதுப்பித்துக்கொள்வது முடியாது என்றால் அவர்களுக்கு வேலையில் அக்கறை இல்லை என்றுதான் அர்த்தம். பதிவு செய்து கொண்ட பிறகு அவர்களுக்கு ஒருக்கால் இடையில் வேலை கிடைத்திருக்கலாம். அவர்களுக்கு வரும்படி உத்திரவு போட்டு தங்களுக்கு வேலை கிடைத்து விட்டதை பல நாள் கழித்து அறிவித்தால் இன்னொருவருக்கு வேலை போடுவதற்குள் கால தாமதம் ஆகிவிடும். ஆகவே இரண்டு மாதத்திற்கு ஒரு முறை புதுப்பித்துக்கொள்ள வேண்டுமென்று இருப்பதுதான் சரி.